
# கிறிஸ்தவ ஆய்வரங்கு - 2011

## "வாழ்வால் உதாரணமாகி..."



### கிறிஸ்தவ மன்றம்

### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

**31.10.2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ ஆய்வரங்கு - 2011

## “வாழ்வால் உதாரணமாகி...”





31.10.2011

கிறிஸ்தவ மன்றம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சஞ்சிகை விபர அட்டவணை


சஞ்சிகை : கிறிஸ்தவ ஆய்வரங்கக் கையேடு

வெளியீடு : கிறிஸ்தவ ஆய்வரங்க மலர்க்குழு - 2011
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

பதிப்பு ஆண்டு : ஐப்பசி 2011

பக்க அளவு : ஏ5

பக்கம் : 40

பிரதிகள் : 500

அச்சுப் பதிப்பு : ஜெயந்த் சென்ரர், யாழ்ப்பாணம்.


வழிகாட்டலும் ஆலோசனையும் :

உயர்திரு எஸ். கே. யோகநாதன் (பீடாதிபதி)
அருள்பணி போல் ஜெயந்தன் பச்சேக் (அ.ம.தி)

மலர்க்குழு :

திருமதி பப்சி மரியதாசன்
*(காப்பாளர், கிறிஸ்தவ மன்றம்)*
திரு. அமல றொஷாந்
திரு. ம. விமல்ராஜ்
செல்வி கி. கிறிஸ்ரின் வேஜின்
செல்வி அ. சங்கீதா
செல்வி ம. மெலானி
செல்வி அ. ஆன்
செல்வி ஜெனிவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மறைமாவட்ட ஆயர்
அவர்களின்

## ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் ஆனது தனது முயற்சியின் வெளிப்பாடாக இவ் வருடம் நடத்தும் "கிறிஸ்தவ ஆய்வரங்குக்கு" எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"வாழ்வால் உதாரணமாகி" என்னும் தலைப்பில் கிறிஸ்தவ மன்ற ஆசிரிய மாணவர்கள் நடத்தும் இந் நிகழ்வு வரவேற்கத்தக்கது. இவர்கள் கற்றுக்கொண்ட அறிவு ஏட்டறிவில் நின்றுவிடாமல் மாறாக அவர்கள் தம் கிறிஸ்தவ விசுவாச வாழ்விலும் நாளாந்த வாழ்க்கை முறையிலும் சிறந்து விளங்க வழிவகுக்கும்

எனவே இம் முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும் பீடாதிபதி, விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்களை நானும் வாழ்த்தி இறை ஆசீர் வேண்டுகின்றேன்.

இறையாசியுடன்
**மேதகு. தோமஸ் சவுந்தரநாயகம்**
**ஆண்டகை**
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Message from the Chief Commissioner

ஆசிச் செய்தி

I am well pleased to send this message for the souvenir to mark the event of Christian Convention with the concept of "Setting examples by life" convened by the Christian Union, Jaffna National College of Education.

It is pleasant that the teacher educators themselves organize it with creativity and enthusiasm to set their goal promising. I am sure such involvement and zeal would definitively contribute not only the organizers and participants but also to the whole nation at large.

While thanking, I congratulate Mr. S.K.Yoganathan, the president, the Vice – Presidents, the Teacher Educators, the Academic and Non – academic staff at the Jaffna National College of Education for the initiative.

I wish them all success in this remarkable endeavor.

**Mr. Tissa Hewavithana**
Chief Commissioner, Teacher Education
Ministry of Education,
"Isurupaya",
Batharamulla.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
பீடாதிபதி அவர்களின்

## ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தினர் "வாழ்வால் உதாரணமாகி" எனும் தொனிப்பொருளில் கிறிஸ்தவ ஆய்வரங்கு ஒன்றை இவ்வாண்டு நடத்துகின்றனர். தற்காலிகமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இணைக்கப்பட்ட கிறிஸ்தவத்துறை மாணவர்கள் தமது பயிற்சி நெறியின் ஓர் அங்கமாக இந் நிகழ்வை நடாத்துவதில் ஆர்வமாக உள்ளதையிட்டு மகிழ்வடைகிறேன்.

எழு! ஒளி வீசு!
உன் ஒளி
மனிதர் முன்
ஒளிர்க. (ஏசாயா 61:1)

என்னும் வேத வசனத்திற்கிணங்க ஆசிரிய வாழ்வு என்பது மகத்துவமானது. பல ஆசிரியர்கள் தமது வாழ்வை முன்னுதாரணமாக்கி சமூக முன்னேற்றத்திற்காக பாடுபட்டு உழைத்து தமது வாழ்வை நிறை வாக்கியுள்ளார்கள். இத்தகைய ஆசிரிய மாதிரிகள், எமது முகிழ்நிலை ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்திக்கு அவசியமானவர்கள். எனவே இளைஞர்களாக துடிப்புடன் எதையும் சாதிக்கும் ஆர்வத்துடனும் உள்ள இளம் ஆசிரியர்களுக்கு தேவையான விழுமியப்பண்புகளை வழங்குவதாக இவ் ஆய்வரங்கு அமையும் என நம்புகின்றேன்.

பல்வேறு ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் முன்னின்று செயற்படும் கிறிஸ்தவ மன்றத்தினரின் மேற்படி ஆய்வரங்கு சிறப்புற எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

திரு. எஸ். கே. யோகநாதன்
பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தே.க.க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மறைமாவட்ட குருமுதல்வர்
அவர்களின்

## ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தினர் தமது கற்றல், கற்பித்தல், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுடன் இணைந்த வகையில் "வாழ்வால் உதாரணமாகி..." எனும் தலைப்பில் கிறிஸ்தவ ஆய்வரங்கு ஒன்றை முன்னெடுப்பதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய ஆசிரிய உலகம் பல்வேறு சவால்களை எதிர்நோக்கியதாக இருக்கின்றது. சட்டம், ஒழுங்கு அற்ற ஒரு சமுதாயம் உருவாகுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்நிலையில் ஆசிரியன் தனது மனப்பாங்கை விருத்தி செய்வதோடு, மனிதத்தை நிலைநிறுத்த வேண்டிய கடமைப்பாடும் உடையனவாக இருக்கின்றான். இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்த பல மனிதர்கள் தமது வாழ்வை எமக்கு முன்னுதாரணமாக்கியுள்ளனர். இறைமகனாகிய இயேசு இவர்களுள் முதன்மையானவர். அவர் வழங்கும் ஆன்மீக அனுபவங்களின் முன்சுவையை அறிந்து எமது வாழ்வைக் கட்டியெழுப்ப வேண்டியது கிறிஸ்தவர்களின் கடமையாகும்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்கள் இந்த கிறிஸ்தவ ஆய்வரங்கினால் பயன்பெற்று நல் விழுமியங்களை தமது வாழ்வில் கடைப்பிடிப்பார்கள் என எதிர்பார்க்கின்றேன். கிறிஸ்தவ ஆய்வரங்கு சிறப்புற நடைபெற என் வாழ்த்துக்களையும், இறைவனின் ஆசீரையும் வேண்டி நிற்கின்றேன்.

அருள் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்
குருமுதல்வர்,
யாழ் மறைமாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கைத் திருச்சபை குருமுதல்வர் அவர்களின்

## ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களின் "வாழ்வால் உதாரணமாகி..." என்ற சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசிரியர்கள் பின்பற்றப்பட வேண்டியவர்கள். ஆசிரியத்துவம் ஒரு சேவை, பணி, கடமை, வேலை என்பவற்றிற்கு அப்பால் அர்ப்பணிப் புள்ள ஒரு வாழ்வு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வாக்குக்கமைய ஆசிரியத்துவம் வழிபட வேண்டிய, பின்பற்றப்படவேண்டிய உதாரணமாகி நிற்கின்றது.

இன்றைய சூழ்நிலையில் தொலைக்கல்வி, கணினிமூலம் கல்வி, அஞ்சல் கல்வி ஆகியன மாணவர்களை ஆக்கிரமிக்கின்ற வேளையில் எம்முன்பாக, எமது வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக, உதாரணமாக, சாட்சியமாக வாழும் ஆசிரியர்கள் மிக வேண்டப்படத் தக்கவர்களாகக் கருதப்படுகின்றனர். எமது பாரம்பரியம் குரு - சீடத்துவ கல்விப் பாரம்பரி யம். குருவையே தம்வாழ்வின் உதாரணமாகவும் இலக்காகவும் கொண்டு முழுமையான கல்வியை, அறிவைப் பெற்றுக்கொண்டனர் நம்முன்னோர்.

தற்காலத்தில் இவ்வுறவு விரிசலடைந்து காணப்படுவதைக் காணலாம். இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆனால், அடிப்படையை நோக்குமிடத்து வளர்ச்சியடைந்து செல்லுகின்ற உலகின் போக்கிற்கு மாணவர்கள் உட்படுத்தப்படுவதும், மாணவர்களுக்கு உதாரணமாகத் திகழவேண்டிய அர்ப்பணிப்பும் சேவை மனப்பாண்மையும் கொண்ட ஆசிரி யர்களைக் காணமுடியாததுமாகும்.

எனவே எமக்கு முன்பாக விடப்பட்டுள்ள சவால் வாழ்வின் உதார ணமாக ஆசிரியர்கள் எம் சமூகத்திற்கு தங்களை அர்ப்பணிக்க வேண் டியதன் அவசியமாகும். கல்வியியற் கல்லூரி மாணவர்களின் எதிர்காலம் அர்ப்பணிப்பு நிறைந்ததாக அமைய வாழ்த்துகிறேன்.

**வண. செ. பி. நேசகுமார்**
யாழ். குருமுதல்வர்
இலங்கைத் திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஸ்ட ஆலோசனைச்சபை உறுப்பினர் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் ஆய்வரங்கில் வெளியிடப்படும் இம் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கு வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

எங்கள் இதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் வாசிக்கப்படப்போகும் எங்கள் நிருபங்கள் நீங்களே. நீங்கள் இந்த உலகத் தின் வெளிச்சமாயிருக்கிறீர்கள். பவுல் அடியான் கூறியதுபோல "உண்மை யுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதியுள் ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவொ அதுவாகவே சிந்தித்துச் செயலாற்றுங்கள்.

யேசுபிரான் கூறியதுபோல நீங்களே இந்த உலகத்தின் வெளிச்சமா யிருக்கிறீர்கள். அதாவது, அறியாமையென்ற இருளில் இருக்கின்ற ஜனங் களுக்கு நல்ல வழிகாட்டியாகவும், உப்பைப் போல சுவையூட்டு கிறவர்களாயும், தேசத்தைப் பாதுகாக்கிறவர்களாயும் புறப்பட்டுப்போய் தேசத்தின் நடுவில் சுடர்களைப்போல் பிரகாசித்து கோணலும், மாறுபாடு மான சந்ததியை (உலகை) நல்வழிப்படுத்துவீர்களாக.

இந்த வாழ்வு, இந்த உலகத்தோடு முடிவதில்லை. நித்தியத் திற்குள்ளும் நம்மைக் கொண்டுபோகப் போகின்றது. ஆகையால் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலுள்ள பிதாவை மகிமைப் படுத்தும்படிக்கு இறைவன் உங்களை எங்கெங்கு கொண்டு செல்கிறாரோ? எவ்விடத்தில் வைக்கிறாரோ? அங்கு நீங்கள் "வாழ்வால் உதாரணமாகி" விளங்க வாழ்த்துகிறேன்.

லயன் Dr. வை. தியாகராஜா
சிரேஸ்ட ஆலோசனைச் சபை உறுப்பினர்,
யாழ்ப்பாணம் தே.க.க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி அவர்களின்**

## ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி கிறிஸ்தவ மன்றம் 'வாழ்வால் உதாரணமாகி' என்னும் தொனிப்பொருளுடன் ஆய்வரங்கினை மேற்கொண்டு அதன் வெளியீடாக மலர் ஒன்றினையும் வெளியிட்டுள்ளமை சிறப்புக்குரியதாகும்.

எமது கல்லூரியில் கிறீஸ்தவ சமயம் சார்ந்த முகிழ்நிலை ஆசிரியர்கள் தமது சமயம் சார்ந்த செயற்பாடுகளை சிறந்த ஒழுங்கமைப்புடனும் புனிதத்துடனும் செய்து வருகின்றார்கள். தொடர்ந்து இரு அணி கிறீஸ்தவ துறை முகிழ்நிலை ஆசிரியர்கள் எமது கல்லூரியில் பயிற்சி பெற்றுள்ளது மட்டுமல்லாது அவர்கள் கல்லூரியின் ஏனைய இணைச் செயற்பாடுகளிலும் பலவகை நிகழ்ச்சிகளிலும் தமது திறமைகளை பூரண மாக வெளிப்படுத்தி உள்ளார்கள். அந்த வகையில் ஒளிவிழா, வாராந்த வழிபாடுகள், சஞ்சிகை வெளியீடு, கலை விழா, கல்லூரி விசேட நிகழ்ச்சிகள் போன்றவற்றில் தமது பங்களிப்பை பூரணமாக வழங்கியுள்ளார்கள்.

அவை எமது கல்லூரியில் பதிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இனி வரும் காலங்களில் கிறீஸ்தவ துறை வவுனியா தேசிய கல்வியற் கல்லூரிக்கு செல்லவுள்ளமையால் அவர்களது சேவைகள் பங்களிப்பு எமது கல்லூரிக்கு கிடைக்க வழி இல்லாமல்போவது கவலைக்குரியதாகும். ஆயினும் கிறீஸ்தவ சமய முகிழ்நிலை ஆசிரியர்கள் ஏனைய துறைகளில் பயில்வதனால் அவர்களின் செயற்பாடுகள் தொடர்ந்து எமக்கு கிடைக்கும் என்ற திருப்தி எமக்கு ஆறுதல் அளிக்கின்றது. அவர்கள் அனைவரதும் பணி சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு விருப்படைகிறேன்.

மேலும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ள இவ் ஆய்வரங்கு இறைவன் அருளுடன் பொலிவுற்று மேன்மை பெறவும் பூரணத்துவம் பெறவும் மனமார வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

**திருமதி. ஜெ. தியாகலிங்கம்**
உப பீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
வருகைதரு விரிவுரையாளர் அவர்களின்

## ஆசிச் செய்தி

வாழ்வால் உதாரணமாகிட முனைத்து நிற்கும் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி கிறிஸ்தவ மன்றத்தினருக்கு ஆசிச் செய்தி வரைந்து மகிழ்கின்றேன்.

என்வாழ்வு எனக்கு மட்டும் எனச் சொல்கிறது பின் நவீனத்துவ சுயநல கலாச்சாரம் இது மானிடத்தின் இருத்தலுக்கு எவ் வகையிலும் பங்களிப்புச் செய்யாது என்பதை நடப்பு உலக நிகழ்வுகள் நிருபிக்கின்றன.

உலகிற்கு உப்பாக ஒளியாக இருக்க நாம் விரும்பிட வேண்டும் முயன்றிட வேண்டும் அதற்கு இக்கருத்தமர்வு முயற்சி வலுச்சேர்க்கும் என்பது என் துணிவு

முன்னெடுப்புக்கள் வெற்றி பெற வாழ்த்துக்களும் ஆசிகளும்.

**வண. போல் ஜெயந்தன் அ.ம.தி.**
வருகைதரு விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தே.க.க.

*ஞானம் தன் மக்களை மேன்மைப்படுத்தும். தன்னைத் தேடுவோர்க்குத் துணை நிற்கும். ஞானத்திற்கு அன்பர், வாழ்விற்கு அன்பர்; அதனை வைகறையிலேயே தேடுவோர் மகிழ்ச்சியால் நிரம்புவர்.*
*(சீரான் 4:23-24)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏன் இந்த ஆய்வரங்கு?

**திருமதி பப்சி மரியதாசன்**

சமூக வழிப்படுத்துநர்களாக இயங்கவேண்டிய கடப்பாடுடைய ஆசிரிய சமூகத்தைக் கட்டியெழுப்பும் கைங்கரியத்தை நோக்காகக் கொண்டவையே தேசிய கல்வியியற் கல்லூரிகளாகும். இன்றைய சமூகம் அறிவு விருத்திச் செயற்பாடுகளிலும், திறன் விருத்திச் செயற்பாடுகளிலும் மேன்மைபெற்றுச் செல்லும் அதே வேளை, மனப்பாங்கு விருத்தி பற்றிய வாசிப்புக்கள் கவலைக்குரியதாகவும், அச்சமூட்டுபவையாகவே காணப் படுகின்றன. சமூக வாழ்விற்கு அடித்தளமான ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிக்க வேண்டிய எமது மூத்தோர் சமூகம்கூட சரியான மனப்பாங்கை சரியான சமயத்தில் வெளிப்படுத்திட தயங்குகின்றனர். 'எனக்கு ஏன் தொல்லை' என ஒதுங்கி இருக்கத் தலைப்படுகின்றனர். எமது சமூக மனப்பாங்கு விருத்திக்கு அவசியமான சில கோட்பாட்டு ரீதியானதும், நடைமுறை சார்ந்ததுமான சிந்தனைக் கிளறல்களை ஆசிரிய மாணவரிடையே தோற்றுவிப்பது காலத்தின் தேவையாகும்.

> பல்வேறு உலக அனுபவங்களுக்கிடையே இருந்தும் தனக்கெனப் பாதையை உருவாக்கிட அழைக்கிறது "வாழ்வால் உதாரணமாகி..." கிறிஸ்தவ ஆய்வரங்கு.

திருமதி பப்சி மரியதாசன்
காப்பாளர்,
கிறிஸ்தவ மன்றம்
யாழ்ப்பாணம் தேக.க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆய்வரங்கின் நோக்கம்

**திரு. அமல றொசாந்**

* வாழ்வை உதாரணமாக்கிய உத்தம புருசர்களாகி வாழ்ந்தவர்களை எம் வாழ்வில் முன் உதாரணமாகக்கொண்டு வாழ இன்றைய சமூகத்திற்கு உந்துதல் அளித்தல்.
* எதிர்கால சமூகத்திற்கு எடுத்துக்காட்டாக மிளிர இருக்கும் இன்றைய முகிழ்நிலை ஆசிரியர்களிற்கு ஆன்மீக அனுபவத் திரட்சிகளை வழங்குவதோடு நிகழ்வுகளை திட்டமிடல் ஒழுங்கமைத்தல் தொடர்பான திறன்களை வளர்த்தெடுத்தல்.
* பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றிராமல் எம் வாழ்வில் மற்றவர்களிற்கு நல்ல விழுமியங்களை வாழ்க்கை என்னும் நீரோட்டத்தின் மூலம் வெளிப்படுத்தல்.
* இவ் ஆய்வரங்கின் மூலம் சமூகத்தில் உயர் அந்தஸ்தில் உள்ளவர்களை ஒரு நிலையத்தில் ஒன்றிணைப்பதன் வாயிலாக எதிர்கால ஆசிரிய சமூகத்திற்கு அவர்களை அறிமுகம் செய்தல்.
* எமது கல்லூரிக்கும் சமூகத்திற்கும் இடையில் நல்ல இடைவினைகளை ஏற்படுத்தி சமூக வாழ்வைப் பெறுவதன் வாயிலாக கல்லூரி செயற்பாடுகளுக்கு வளமூட்டி வினைத்திறனாக்குதல்.
* நாம் ஒரு சிலரை பின்பற்றி முன்னுதாரணமாக கொண்டு எமது வாழ்வை வாழ்கின்றோம் இது எம் வாழ்விற்கு உரமூட்டுகிறது அது போல பிறர் வாழ்விற்கு உரமூட்ட எம் வாழ்வை அர்ப்பணித்து வாழத் தலைப்படுதல்.

அமல றொசாந்
மலர்க்குழு
கிறிஸ்தவ மன்றம்
யாழ்ப்பாணம் தேக.க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வால் உதாரணமாகுதல்

## சிலரது உள்ளங்களிலிருந்து...

வாழ்வின் அடிப்படை கிறிஸ்து. அவரை மையமாக வைத்து வாழ்ந்ததனால் கிறிஸ்துவில் இருந்து பெற்ற மனநிலையை நாம் பெறக்கூடியதாக இருந்தது. இரக்கம் எல்லோருக்கும் தேவை ஏற்படுத்தும் இடத்தில் உதவி செய்தல். ஆன்மீகம் மற்றும் அன்றாடப் பணி அர்ப்பணிப்பு அவற்றோடு கூடிய வாழ்வு வாழ கிறிஸ்துவே உதாரணமாகினார்.

"உங்களுக்கு நீங்கள் பிறர் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கின்றீர்களோ, அதையே நீங்கள் மற்றவருக்குச் செய்யுங்கள்." இதுவே எனது தாரக மந்திரம்.

**அருள்பணி ம. ஜோர்ச்**
இயக்குநர்,
யாழ். மறைக்கல்வி நடுநிலையம்.

1927ஆம் ஆண்டு மே மாதம் 23ம் திகதி சீனாவில் நிலநடுக்கம் ஏற்பட்ட போது ஒரு ஆலயமும் இடிந்தது. ஆவ்வாலயத்தின் இடிபாடுகளை அகற்றி உடல்களை அப்புறப்படுத்திய போது ஒரு கன்னிகையின் உடலுக்கு அடியில் ஒரு குழந்தை ஒன்று பத்திரமாக இருந்தது. தனது துன்பத்தில், இறப்பில் பிறர் வாழவேண்டுமென்ற உயர்ந்த உள்ளம் கொண்ட இக்கன்னிகை இயேசுவின் வாழ்வை வாழ்ந்து காட்டியிருக்கின்றார்.

**அருள்பணி S.L.N. குருஸ்**
பங்குத்தந்தை
கரம்பன்.
077 990 6310



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்..."

1992 ஆம் ஆண்டு திருக்கோவில் கோமாரி போன்ற பிரதேசங்களில் உள்நாட்டு போரினால் அக்கிராமங்களைச் சேர்ந்த 25 வயதிற்கும் உட்பட்ட பெண்கள் தங்கள் கணவன்மாரை (உழைப்பாளரை) இழந்து வாழ்வாதாரம் அற்ற நிலையிலும், ஒவ்வொரு குடும்பத்திலும் 5 வயதிற்கு உட்பட்ட மூன்று நான்கு பிள்ளைகளுடன் தனித்திருந்த 200 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கான நல்ல செய்தி என்ன? அரசியல், பொருளாதாரம், சாதி, வகுப்பு ரீதியாக ஒடுக்கப் பட்டவர்களுக்கான நல்ல செய்தி என்ன? எல்லாவற்றிற்கும் மேலாக உணவற்றி ருப்பவர்களுக்கான நல்ல செய்தி என்ன? தூய மாற்குவில் கூறப்பட்டுள்ள இந்த நற்செய்தி அறிவிப்பதே காலத்தின் தேவை என உணர்ந்து நான் குருத்துவப் பணியாற்றுகிறேன்.

**அருள்பணி ஐ. டானியல் டிக்சன்**
பங்குத் தந்தை
தூய யாக்கோபு ஆலயம்,
நல்லூர். 021 222 6943

---

நான் யாராவது ஒருவருக்கு வாழ்க்கையில் உதாரணமாகி விட்டேன் என்று என்னால் உறுதிப்படுத்திக் கொண்டேன் என்றால் அது எனது வெற்றி.

**இ. அன்ரன் திலகரட்ணம்**
நிர்வாக உத்தியோகஸ்தர்,
மனித முன்னேற்ற நடு நிலையம்,
யாழ்ப்பாணம்.

---

மனிதர்களுக்கு உகந்தவர்களாகுமாறு வேலைசெய்வதாகக் காட்டிக்கொள்ளாமல், ஆண்டவருக்கு அஞ்சி முழு மனத்தோடு வேலை செய்யுங்கள். நீங்கள் செய்கின்ற அனைத்து வேலைகளையும் மனிதருக்காக அல்ல, ஆண்டவருக்காகவே செய்கின்றீர்கள் என உணர்ந்து உளமாரச் செய்யுங்கள். அதற்கு கைமாறே ஆண்டவர் உங்களுக்கு உரிமைப்பேறு அருள்வார். (கொலோசையர் அதிகாரம் 3:22-24)

**யே. யூட் வால்ரன்**
திட்டமிடல் பணிப்பாளர்,
ZAO.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதத்துவம் மரணித்து மானிட வாழ்வின் மகத்துவத்தை மதிக்க மறந்து வாழ்ந்த மனிதர்களை வாழும் வழிகாட்டி தம்மையே அர்ப்பணித்த உதாரண புருசர்கள் பலர். அவ்வுதாரண புருசர்களின் வழியில் பயணிக்கும் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து இந்நிகழ்வை ஒழுங்கமைத்திருப்பது காலத்தின் தேவையை நிறைவு செய்யும் ஓர் கைங்கரியமாகும்.

"மாண்புமிக்க இவ்வரிய முயற்சிக்கு எம் மனம் நிறைந்த வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்"

**பா. பிரபாகரன்**
காப்பாளர்,
இந்து மன்றம்,
யா.தே.க.க.

---

ஏழை மாணவரில் கிறிஸ்துவின் சாயலையும், கடமையில் தவறும் ஆசிரியர் மட்டில் தேவாலயத்தில் விற்பவர், வாங்குபவர்களுடன் கிறிஸ்து நடந்துகொண்ட கண்டிப்பு, எல்லாவற்றையும் போரில் பறிகொடுத்த எம்மவரில் கிறீஸ்து லாசரின் இழப்பில் கண்ணீர் சிந்துவதையும், உறுதியான தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பத்தில் பிலாத்துவின் முன் "நீரே சொல்லிவிட்டீர்" எனத் தெளிவாகத் தன்னை இயேசு வெளிப்படுத்தியதும் அப்பணி வாழ்வில் இயேசுவை உதாரணமாக்கிக்கொண்டேன்.

**திருமதி றெஜினா இருதயநாதன்**
ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்,
நவாலி.

---

ஆன்மீக வாழ்வுக்குத் தடையாக இருக்கின்ற விடயங்களை ஒழிக்க கிறிஸ்துவைப்போல் நாம் முன்வரவேண்டுமேயொழிய மற்றவரைக் குறைகூறி வாழக்கூடாது. காலம் கடந்துவிட்டது எனக் கூறாமல் அடுத்த தலைமுறைக்காவது முன்னுதாரணமாகச் செயற்படவேண்டும்.

**சுவாம்பிள்ளை கென்றி**
முன்னாள் உதவி பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி.

---

பெயருக்கு கிறிஸ்தவன் என்று வாழாமல் எம் வாழ்வு மூலமாக கிறிஸ்துவை வெளிப்படுத்த வேண்டும். அத்தோடு போதிப்பவர்கள் போதனைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக வாழ்தல் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மனிதனுக்கு இறைவன் அளித்த நிபுணத்துவ திறன்களைப் பயன்படுத்தி யாராவது ஒருவருக்காவது உதவுதல் வேண்டும்.

**எம். றெமிடியஸ்**
சட்டத்தரணி,
யாழ்ப்பாணம்.

"உன்னைப்போல் உன் அயலானை நேசி" என்ற இயேசுவின் வார்த்தைக்கு அமைவாக எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களை அன்பு செய்து சமுதாயத்துக்குப் பொருத்தப்பாடான பிள்ளைகளாக உருவாக்குதல்.

**திருமதி. எல். மகேஸ்வரன்**
அதிபர்,
சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை

எமக்காய் உயிர்தந்த இறைமகனின் உதாரணங்கொண்டு ஏழைகளின் நல்வாழ்விற்காய் தன் வாழ்வை அர்ப்பணித்த அன்னை திரேசாளின் வாழ்வு உங்களுக்கு வழிகாட்ட வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி அமிர்தாஞ்சலி சிவபாலன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கில இலக்கியம்
மொழியியல் ஆங்கிலத்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம். 071 282 7971

உப்பாகவும் ஒளியாகவும் வாழ்வோம்.

வரலாற்றில் நிகழ்ந்த சில பிறப்புக்கள் வரலாற்றையே மாற்றியிருக்கின்றன. சிலரின் பிறப்புக்கள் வரலாற்றிற்கு அணி சேர்த்துள்ளன. இன்னும் சிலரின் பிறப்புக்கள் வரலாற்றையே பின் நோக்கி தள்ளியிருக்கின்றன. ஆனால் இறைமகன் யேசுவின் பிறப்பு வரலாற்றிற்கே வாழ்வு கொடுத்தது. அதே போல் எமது வாழ்வும் மற்றவர்களின் வாழ்விற்கு சுவையூட்டும் உப்பாகவும் அவர்களின் வாழ்க்கைப் பாதைக்கு வழி காட்டும் ஒளியாகவும் அமைந்திட வேண்டும்.

**மா. ஞானப்பிரகாசம்**
அதிபர்,
யா/புனித சாள்ஸ் ம.வி.
யாழ்ப்பாணம். 021 222 9037



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சக்கேயுவே இறங்கி வா! உன்னுடன் நான் விருந்துண்ண வேண்டும்" உலகம் வெறுத்து ஒதுக்கியவர்களையும், அடி நிலை மனிதர்களையும் அரவணைத்த இயேசு அவர்களுக்கு புது வாழ்வும், நம்பிக்கையும் அளித்தார். பொதுப் பணி வாழ்வில் ஈடுபடும் நானும் இதனைப் பின்பற்றி என் சேவையில் அடி நிலை மனிதர்களுக்கே முதன்மையளிக்கின்றேன்.

**பி. சே. அன்ரன்**
அதிபர்
யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்,
021 222 8762

"இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்பதனை கிறிஸ்து தன் வாழ்வால் உதாரணமாக்கினார். நமது வாழ்வில் ஆன்மீகம் வெளிப்படும் செயல்களாக எமது ஆற்றல், திறன் முன்னுதாரணமாகவும், பிறர் உருவாக்கத்திலும் பங்கேற்று பயன்காணும் ஒவ்வொரு செயல்களும் எம் வாழ்வால் உதாரணமாக்கலாம் என்பதனை எமது அன்றாட வாழ்வில் உணர்கிறேன்.

இவை இலகுவான காரியம் அல்ல பிறரால் ஏற்றுக் கொள்ள தயங்கினாலும், தடைகள் ஏற்படுத்தினாலும் ஆன்மீக பற்றுறுதியுடன் முன் மாதிரியாக வாழ்வதற்கு நற்செய்தி வார்த்தைகளே வாழ்வின் வரையறையாக வேண்டும். இதனை வாழ்வாக்க முனையும் மனபலம், ஆன்மீக பலம் தான் கிறிஸ்துவின் வார்த்தைக்கு எம் வாழ்வால் அர்த்தமூட்ட முடியும்.

**S. யோசப்பாலா**
உளசமூகச் சீராளன், எழுத்தாளர்.
814/2 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இம்மை வாழ்வை நிறைந்த மாண்புகளோடு வாழ்வதன் மூலம் முன் உதாரணமாயும், முழுமையாயும் இறைவழி சென்று பிறர் இறைவழி சேரவும் உதவுவோம்.

**திரு. மி. சூசைதாசன்**
காப்பாளர்,
கிறிஸ்தவ மன்றம்,
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை வார்த்தையின் வழி நின்று உண்மைக்கும், நீதிக்கும் குரல் கொடுப்போம்.

சொலமன் சூ. சிறில்
முன்னாள் பா. உ. யாழ். மாவட்டம்
64, கோவில் வீதி,
சுண்டிக்குளி.

மனிதன் மனித நேயங்களோடு நல் விழுமியங்களோடு வாழ்வதற்காக தன் உயிரைப் பலியாக்கி மனித வாழ்வியல் வாழ்வால் உதாரணமாகிய இயேசுக்கிறிஸ்துவின் சாட்சிகளாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் வாழுகின்ற சூழலில் இயேசுவின் சாயலாக வாழ வேண்டும்.

ஜெ. கில்பேட் குணம்
கணக்காளர்,
பிரதேச செயலகம்,
தென்மராட்சி. 075 966 4266

*ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால், நீங்களும் ஒருவர் மற்றொருவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்ததுபோல் நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்.*

*(யோவான் 12:14-15)*

*நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தோர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்.*

*(யோவான் 15:16)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## கிறிஸ்தவ ஆய்வரங்கு - 2011

*"வாழ்வால் உதாரணமாக..."*

### நிகழ்வொழுங்கு

| | | |
|---|---|---|
| மு.ப. | 08.30 | பதிவு |
| | 09.00 | வரவேற்பு |
| | 09.10 | ஒளியேற்றல் |
| | 09.20 | மும்மத வழிபாடு |
| | 09.30 | வரவேற்பு நடனம் |
| | 09.40 | வரவேற்புரை |
| | 09.45 | பாடல் 1<br>*"என்னை வழி நடத்தும் தூய ஆவியே..."* |
| | 09.50 | பீடாதிபதி உரை |
| | 10.00 | ஆசியுரை<br>பேரா. அருள்கலாநிதி ஞா. பிலேந்திரன்<br>*(தலைவர், கிறிஸ்தவ - இஸ்லாமிய நாகரீகத்துறைகள், யாழ். பல்கலைக்கழகம்)* |
| | 10.05 | பாடல் 2<br>*"கடல் கடந்து சென்றாலும்..."* |
| | 10.10 | மன்றக் காப்பாளர் உரை |
| | 10.30 | ஆயர் உரை |
| | 10.40 | **தேனீர் இடைவேளை** |
| | 10.45 | பாடல் 3<br>*"மாறாதது மாறாதது..."* |
| | 10.55 | அமர்வு -1<br>**'நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அரங்கு'** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம்
திரு. அன்ரோ அமலவளன் ஆனந்தராஜா
(இணைப்பாளர்)
*(நீதிவான், யாழ்ப்பாணம்.)*

கலாநிதி ஜெ. இராசநாயகம்
*(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வித்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்)*

திரு. எஸ். ரி. நாதன் பீரிஸ்
*(E.K.S.P. / கல்வி அமைச்சு,*
*செயற்திட்ட முகாமையாளர், வடமாகாணம்.)*

திரு. பி. சே. அன்ரன்
*(அதிபர், யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.)*

11.05 உரை 1
அருட்கலாநிதி போல் றொகான்
'வாழ்வால் உதாரணமாகி' (மெய்யியல் நோக்கு)
*(விரிவுரையாளர், யாழ். குருத்துவக் கல்லூரி,*
*யாழ். பல்கலைக்கழகம்)*

11.25 பாடல் 4
*'தொடும் என் கண்களையே...'*

11.30 உரை 2
உயர்திரு க. பேணாட்
'வாழ்வால் உதாரணமாகி' (வாழ்வியல் நோக்கு)
*(பீடாதிபதி, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி )*

11.50 கலந்துரையாடல்

பி.ப. 12.50 **மதிய உணவு**

2.00 அமர்வு 2
நடனம்

2.10 அறிமுகம்

திரு. இ. அ. திலகரெட்ணம் (இணைப்பாளர்)
*(நிர்வாக உத்தியோகத்தர்,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மனித முன்னேற்ற நடுநிலையம், யாழ்ப்பாணம்)*

திருமதி வேளாயினி ஜெயதிலக்
*(மேலதிக மாவட்டப் பதிவாளர், பிரதேச செயலகம், வலி தெற்கு, உடுவில்.)*

திருமதி ஜெ. தியாகலிங்கம்
*(உப பீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்), யாழ்ப்பாணம் தே.க.க.)*

2.15 காணொளி: 'என் ஆசான்'

2.30 கலந்துரையாடல்

3.00 பாடல் 5
*'என் சுவாசக்காற்றே'*

3.05 நன்றியுரை

3.10 நாடகம் : "நிலவினைக் குருடாக்க முடியாது"
*(கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம், யாழ். மறை மாவட்டம்)*

4.00 கல்லூரிக் கீதம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வால் உதாரணமாய்...!

யோ. போல் றொகான்

## உட்புகுமுன்

எந்தவொரு மனித ஈடுபாட்டை எடுத்துக்கொண்டாலும் இரண்டு பிரதான பிரிவுகளை எதிர்கொள்ள வேண்டும். 1. அந்த ஈடுபாடு பற்றிய கொள்கை அல்லது கருத்தியல் அல்லது கோட்பாடு (theory). 2. அந்த ஈடுபாடு பற்றிய செய்முறைகள் அல்லது நடைமுறைகள் அல்லது எடுத்துக்காட்டுக்கள் (praxis). வாழ்வு என்பது மனிதனின் இன்றியமையாத மாபெரும் ஈடுபாடாகும். மனிதவாழ்வு பற்றிய பல கோட்பாடுகளும் கொள்கைகளும் மனித அறிவியல் வரலாற்றில் அளவுக்கதிகமாகவே முன்வைக்கப்பட்டு விட்டன என்று கூறலாம். மனித வாழ்வு இப்படித்தான் வாழப்படவேண்டும் என்ற பல்வேறுபட்ட போதனைகளை உலகின் எல்லாச் சமயங்களும் கலாச்சாரங்களும் தாராளமாகவே உருவாக்கி வெளியிட்டுள்ளன. 'வாழ்வால் உதாரணமாய்...' என்ற தலைப்பானது வாழ்வு பற்றிய கோட்பாடுகளையும் கொள்கைகளையும் (theories of life) ஓரந் தள்ளி, வாழ்வு பற்றிய எடுத்துக்காட்டுகளுக்கு முன்னுரிமை கொடுக்க விடுக்கும் சவாலாகக் கொள்ளப்படலாம்.

வாழ்வால் உதாரணமாகுதல் என்று கூறுகையில், ஒருவர் தனது செயற்பாடுகளினாலும், நடைமுறைகளினாலும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து அவர்களது வாழ்வைச் செம்மையுறச் செய்தல் என்ற அர்த்தத்தைத் தோற்றுவிக்கிறது. வாழ்வு பற்றிய போதனைகள் அல்லது கோட்பாடுகளை அறிவுரைகளாகக் கூறுவதனால் அல்ல; மாறாக வாழ்ந்து காட்டுவதனால் வழிகாட்டிகளாகத் திகழவேண்டும் என்ற அழைப்பினை இத்தலைப்பு விடுக்கிறது எனலாம். இத்தலைப்பினை ஆழ்ந்து நோக்குவதற்கு மனித வாழ்வு பற்றிய சில அடிப்படையான ஆய்வுகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

## மனித வாழ்வின் பரிமாணங்கள்

மனித வாழ்வு தனியனான ஒரு மெய்மை அல்ல. அது பன்முகங்களைக் கொண்டதாக வெளிப்படுகிறது. மனித வாழ்வை வரையறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய முற்படுவோர் அதனைப் பல்வேறு தளங்களில் வைத்து நோக்குவர். எல்லா உயிரிகளுக்கும் பொதுவான உயிரியல் வாழ்வு (biological life) என்ற தளத்தில் இருந்து மனிதருக்கேயுரித்தான வாழ்வின் மேம்பட்ட மற்றும் தனித்துவமிக்க பரிமாணங்களை நோக்கலாம்: அறிவியல், அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம், உளவியல் ஆகிய பல்வேறு தளங்களில் மனிதவாழ்வு விரிந்து வியாபிப்பதை காணலாம். இப்படிப்பட்ட பலவேறு பரிமாணங்களின் ஒட்டுமொத்தத் தொகுப்பே மனித வாழ்வு ஆகும்.[1]

இவ்வாழ்வானது சில தனிநபர்களில் குறிப்பிட்ட தளங்களில் பூரணத்துவமிக்கதாக அல்லது முன்னுதாரணமிக்கதாக வெளிப்பாடு கொள்ளும். அதாவது சில தனி நபர்கள் வாழ்வின் குறிப்பிட்ட ஒரு தளத்தில் துறைபோனவர்களாக அமையலாம். அல்பேட் ஐன்ஸ்ரைன் அறிவியலிலும், நெல்சன் மண்டேலா அரசியலிலும், அன்னை தெரேசா சமய சமூகத்துறைகளிலும், பில் கேட்ஸ் பொருளியலிலும் சமகால முன்னுதாரணங்களாக முன்வைக்கப்படுவர். (ஆனால் ஒரு தளத்தில் எடுத்துக் காட்டான வாழ்வை வெளிப்படுத்தியவர், வாழ்வின் இன்னொரு பரிமாணத்தில் இடறலாக அமைகின்ற தன்மையையும் அவதானிக்க வேண்டும்.)

## மனிதமைய அணுகுமுறைகள்

நாளாந்த சாதாரண உரையாடல்களில் மனிதனுக்குக்கீழ்ப்பட்ட சில உயிரினங்களை மனிதருக்கு இருக்கவேண்டிய சில நற்பண்புகளுக்கு முன்னுதாரணமாகக் குறிப்பிடுவதுண்டு. நாயை நன்றிக்கும், கழுதையைப் பொறுமைக்கும், யானையை ஞாபகசக்திக்கும் எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டாலும் மனிதருக்குக் கீழ்ப்பட்ட உயிரினங்கள் மனிதருக்கு முன்னுதாரணங்களாக அமைய முடியாது. மனிதன் தனித்துவம் மிக்கவன். பகுத்தறிவும், சிந்திக்கும் ஆற்றலும் கொண்டதனால் இப்பிரபஞ்சத்தின் காணக்கூடிய படைப்புக்கள் அனைத்தினதும் சிகரமாக மனிதன் அமைகின்றான். அத்துடன் அனைத்துத் துறைகளினதும், செயற்பாடுகளினதும் மையமாகத் திகழ்வதால் மனிதனுக்குக் கீழ்ப்பட்டவைகள் அவனது வழிகாட்டிகளாக அமைவது முரண்கையாக அமையும். அப்படியானால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு முன்னுதாரணமாக முடியுமா?

அனைத்து அறிவியல் ஈடுபாடுகளிற்கும் புராதன காலத்தில் பிரபஞ்சம் மையமாக இருந்தது. இது மத்திய காலத்தில் கடவுள் மையமாக மாறியது. ஆனால் நவீன காலம் இவ்விரண்டையும் விளிம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கு விரட்டி அனைத்தினதும் மையப்புள்ளியாக மனிதனை நகர்த்தி கொலுவேற்றியது. (Anthropo-centrism) "நான் சிந்திக்கிறேன். ஆகவே நான் இருக்கிறேன்" என்று மனிதசிந்தனையின் பிறப்பான அறிவின் மூலம் மனித இருப்பை நியாயப்படுத்திய டெக்கார்த் (Descartes), மனித சிந்தனை மரபில் மாற்றத்தை ஏற்படுத்தி நவீன காலத்திற்கு கால்கோளிட்டார். இது மனிதத்தை மையமாக்கும் யதார்த்தத்தின் காலக் கட்டாயமாக ஏற்கப்பட்டது. இப்புதிய சிந்தனை மத நம்பிக்கைகள் அனைத்தையும் மனித அறிவு என்ற அளவீட்டினால் பிரதியீடு செய்தது. நவீன காலத்தின் மனித மையப் பிரகடனம் மனித அறிவின் மீதான முற்றுமுழுதான சரணம். பிரபஞ்சமனைத்தும் மனித சுயமதிப்பீட்டிலும், மனித தேவையின் அடிப்படையிலும் கணக்கிடப்பட்து. மனிதத்தை அடக்கும் அல்லது கையாழும் உயர் அதிகாரம் ஏதுமில்லை. மனிதனே இறுதி அதிகாரம்.

மனிதமைய அணுகுமுறைகள் மனிதனை தனித்துவமிக்க வனாகப் பிரகடனம் செய்தன. ஒவ்வொரு மனிதனும் தன்னிலேயே ஒரு பிரபஞ்சம். மனிதனது தனித்துவம் அவனை தன்னிலேயே முழுமையுள் ளவனாக மாற்றுகிறது.[2] அவனே அவனக்கு வழிகாட்டி; நீதிபதி. மற்றமனிதர்கள் ஒரு தனி மனிதனுக்கு வழிகாட்டியாக இருப்பதோ, ஒரு தனிமனிதன் மீது தாக்கம் செலுத்துவதோ முடியாது. அவ்வாறு மற்றமனிதர்களின் பாதிப்பு அல்லது தாக்கம் ஒரு தனிமனிதனின் சுய புத்தியை அவமதிப்பதாக அமையும்; ஒரு தனிமனிதனுக்கிருக்கும் ஆளுமையையும், தனது வாழ்வை தான் விரும்பியபடி வகுப்பதற்கான எல்லையற்ற சாத்தியப்பாடுகளையும் அது பாதிக்கும். தனிநபர்கள் தமது வாழ்வை மற்றையவர்களின் முன்னுதாரணங்களைக்கொண்டு 'இப்படித்தான் வாழவேண்டும்' என்று வகுத்துக்கொள்ள வேண்டிய நியதி எதுவுமில்லை. அவர்கள் 'எப்படியும் வாழலாம்' என்ற சுதந்திரம் உடைய வர்கள். இவ்வாறு மனிதமைய அணுகுமுறைகள் மனிதர்களை எல்லை யற்ற தனியன்களாக (boundless individuals) உயர்த்தின. மற்ற மனிதர் களின் வாழ்வின் முன்னுதாரணங்களையும், எடுத்துக்காட்டுகளையும், வழிகாட்டுதல்களையும் நிராகரிக்கும் சிந்தனைப்போக்குகள் நவீன காலத்தில் முகிழ்க்க ஆரம்பித்தன. 'மற்ற மனிதன் நரகம்' என்று சிந்திக்கின்ற ஒரு தனியாதிக்க கலாச்சாரம் (individualistic culture) மெல்ல ஆரம்பித்தது.

## 'மற்ற மனிதன் நரகம்'

நவீனயுகம் முன்வைத்த கட்டுப்பாடற்ற மனித மையம் மனிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை எல்லையற்ற தனியன்களாக உருவாக்கியமையும், நவீன காலத்தின் அளவுக்கு மீறிய விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியும் இணைந்து மனிதனின் சமூக இயல்பை கேள்விக்குள்ளாக்கின. கருத்தியல் ரீதியாக மனிதர்கள் தனியன்கள் என்று உறுதி செய்யப்பட, விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி இத்தனியன்கள் சமூகத்தைத் தவிர்த்து வாழ்வதற்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தது.

மனிதன் தன்னிலே உடல் - ஆன்மா ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளதனால் அவனது இருப்பில் இறைத்தன்மையும் விலங்குத்தன்மையும் கலந்துள்ளது. இதனை சினிமாக் கவிஞன் 'கடவுள் பாதி மிருகம் பாதி கலந்து செய்த கலவை' என்பான். "இவ்வாறு ஒரே சாராம்சத்தைக் கொண்டுள்ள மற்றவர் எனக்குத் தேவையற்றவர்" என ஜான் பவுல் சார்த்ரே (Jean Paul Sartre) பிரகடனப்படுத்தி "மற்ற மனிதன் ஒரு தனிமனிதனின் நரகம்" என்று வரையறை செய்தார்.[3] ஒவ்வொரு மனிதனும் தனி ஆளாக உள்ளதாலும், ஏதோ ஒருவகையில் மற்றவர்களின் தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் கைப்பற்ற முயற்சிப்பதாலும் மற்றைய மனிதர்கள் தவிர்க்கப்பட வேண்டியவர்கள் என்ற சித்தாந்தம் எல்லையற்ற தனித்துவவாதத்தின் விளைவாக உருவானது. இது எதிர்மறை இருத்தலியல் மெய்யியல் கொள்கை. இன்றும் பலரால் ஏற்கப்படுகின்ற ஒரு சிந்தனாவாதம்.

## வழிகாட்டிகள் அவசியமற்றவர்கள்

மற்றைய மனிதர்கள் நரகமாகவும் தேவையற்றவர்களாகவும் கருதப்படின் அவர்களின் வாழ்வின் முன்னுதாரணங்களும், எடுத்துக்காட்டுக்களும், வழிகாட்டுதல்களும் பயனற்றவையே. ஒவ்வொரு தனியனும் தனது வாழ்வை தன்விருப்பப்படி, எப்படியும், எதேச்சையாக வாழ்ந்து முடிக்கவேண்டியவர். இவ்வாறு தனிநபரின் எல்லையற்ற சுதந்திர வாழ்வுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. இதன் பின்னணியில் வழிகாட்டிகள் என்பவர்கள் அவசியமற்றவர்களாகவும், அர்த்தமிழந்தவர்களாகவும் கருதப்பட்டனர். எதிர்மறை இருத்தலியலின் இந்த விவாதத்திற்கு, ஐரோப்பிய நாகரிகம் தோல்வியடைந்து இருபதாம் நூற்றாண்டில் இரண்டு மாபெரும் உலகப்போர்களை உற்பவித்த வரலாறு முன்வைக்கப்பட்டது. சோக்கிரட்டீஸ் போன்ற மாபெரும் கிரேக்க ஞானிகளும், இயேசுவும், பின்னர் மத்திய கால ஐரோப்பாவின் மாபெரும் புனிதர்களும், ஷேக்ஸ்பியர், கோயத், ரோல்ஸ்ரோய், ஹெகல் போன்ற சிந்தனையாளர்களும் வழிகாட்டிகளாய் இருந்து உற்பத்தி செய்த ஐரோப்பிய நாகரிகம் இருபதாம் நூற்றாண்டில் ஹிட்லரிடம் தோல்வி கண்டது.[4]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னதமான உதாரண புருஷர்களால் வழிநடத்தப்பட்ட ஐரோப்பிய நாகரிகம் தோற்றுவிட்ட நிகழ்வானது மானிடத்திற்கு வழிகாட்டிகள் அவசியமற்றவர்கள் என்ற செய்தியை சொல்லி நிற்பதாக எதிர்மறை இருத்தலியலாளர்கள் கருதுவர்.

## அற்புதமான வழிகாட்டிகள் உருவாக்கிய 'பித்துப்பிடித்த நாகரிகம்'

மேற்கூறப்பட்ட எதிர்மறை இருத்தலியலாளர்களின் கருத்தினை ஆமோதித்து சில பின்னை நவீனத்துவ சிந்தனையாளர்ளும், ஐரோப்பாவின் உன்னதமான உதாரண புருஷர்களால் ஐரோப்பாவில் ஒரு பித்துப்பிடித்த நாகரிகத்தையே உருவாக்க முடிந்ததாக புலம்புவர். "பைத்தியமும் நாகரிகமும்: பகுத்தறிவின் காலத்தில் பித்துப்பிடித்த வரலாறு" என்ற தனது நூலில் மிஷேல் ஃபுக்கோ, சமகால ஐரோப்பாவில் அதிகரித்துள்ள பல்வேறுவிதக் குற்றவாளிகள், விவாகரத்துப் பெற்றவர்கள், ஓருபாலினச் சேர்க்கையுள்ளவர்கள், திருமணமாகாத தாய்மார்கள், பலவிதமான பாலியல் தொழிலாளிகள், எய்ட்ஸ் நோயாளிகள் மற்றும் புதிய விதங் களில் மனநலம் பாதிக்கப்பெற்றவர்களையே அற்புதமான வழிகாட்டிகள் என்று கருதப்பட்டவர்கள் உருவாக்கினர் என குற்றஞ்சாட்டுவார்.[5]

அதேவேளை ஐரோப்பாவின் பித்துப்பிடித்த நாகரிகத்துக்கும் மானிடத்தின் வழிகாட்டிகளின் வாழ்வுதாரணங்களுக்கும் முடிச்சுப் போடுவதில் அர்த்தமில்லை என்ற விவாதங்களும் காத்திரமாக முன்வைக் கப்பட்டன.

## வழிகாட்டிகள் மனிதருக்கு அவசியமா?

ஒருமனிதன் வாழும் சூழ்நிலைதான் அவனை உருவாக்குகிறது என்பது சமகாலத்தில் அனைத்து உளவியலாளர்களினாலும் ஏற்கப்பட்ட உண்மை. கருவில் உருவாகும் பொழுது வெற்றுப்பலகையாக (tabula rasa) இருக்கின்ற மனிதமனம் இவ்வுலகில் பெறப்படும் புலனனு பவங்களின் (கேட்பவைகள், காண்பவைகள், உணர்பவைகள்) ஊடாகவே அனைத்து அறிவையும், வழிமுறைகளையும் பெற்றுக்கொள்கின்றது என்பது அரிஸ்ரோட்டிலின் முடிவு. "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே. அது நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே" என்பது சினிமாக் கவிஞனின் விவாதம். தனது சுற்றாடலில் தான் பார்ப்பவற்றை, கேட்பவற்றை, அனுபவிப்பவற்றைக் கொண்டே ஒரு குழந்தை தனது ஆளுமையை உருவாக்கிக்கொள்கிறது. எனவே ஒரு குழந்தை வாழும், வளரும் சூழலில் நல்ல வாழ்வின் உதாரணங்கள் கிடைக்குமெனின், அக்குழந்தையும் அவ்வுதாரணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு உரியவர்களைப் போலவே உருவாகும் என்பது மறுக்க முடியாத உண்மை.

**'வாய்ச்சொல்லில் வீரரடி'**

பாரதியார் வாய் வேட்டுக்காரர்களை 'வாய்ச்சொல் வீரர்' என்றழைப்பார்.[6] இவர்கள் நல்ல பல விடயங்களை சொல்வதில் மகா வல்லவர்கள். ஆனால் இவர்களது வாழ்வின் உதாரணங்கள் மிக மோசமானவையாக இருக்கும். இயேசுவும் இப்படிப்பட்ட வாய்ச்சொல் வீரர்களைப்பற்றி கடுந்தொனியில் சாடுகின்றார். தனது கால யூத சமயத் தலைவர்களைப் பற்றிக் கூறுகையில் "அவர்கள் என்னென்ன செய்யும்படி உங்களிடம் கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்து வாருங்கள். ஆனால் அவர்கள் செய்வது போல நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில் அவர்கள் சொல்வார்கள், செயலில் காட்டமாட்டார்கள்" (மத்தேயு நற்செய்தி 23:3) என்று எச்சரிக்கின்றார்.

நேர்மையான வாழ்வின் உதாரணங்களை மற்றவர்கள் நேரடியாகக் கண்டு அனுபவிப்பதனால் ஏற்படும் பாதிப்பு அல்லது தாக்கம் மிகவும் காத்திரமானது. தனது வாழ்வு உதாரணமிக்கது என்று மற்றவர்களுக்குக் கருத்துக் கூறுவது வாய் வேட்டாகும். ஆகவே நற்போதனைகள், விழுமியங்கள் பற்றிய கருத்துக்கள், அறிவுரைகள் என்பன வாய்ச்சொல்லில் அமையாது வாழ்வில் வெளிப்படுத்தப்படுவதும், வாய் வேட்டாக அமையாது வாழ்வாக மாறுவதும் இன்றியமை யாததாகிறது.

இன்றைய உலகிற்கு போதனையாளர்கள் தேவையில்லை; சாதனையாளர்களே அவசியம் தேவைப்படுகிறார்கள் என்று முன்னாள் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் தனது போதனைகளில் அடிக்கடி வலியுறுத்துவார்.[7] இயேசு தனது அனைத்துப் போதனைகளுக்கும் தனது சாதனைகளால் சான்று பகர்ந்திருக்கின்றார். மற்றவர்களுக்குப் பணிவிடை புரிவதன் அவசியம் பற்றி வலியுறுத்த தனது சீடர்களின் பாதங்களைக் கழுவியது மிகுந்த காத்திரமான போதனையாக அமைந்தது. சீடர்களின் பாதங்களைக் கழுவியபின் "நான் செய்தது என்னவென்று உங்களுக்குப் புரிந்ததா?" என்று இயேசு அவர்களைப்பார்த்துக் கேட்ட கேள்வியை இங்கு அவதானிக்கவேண்டும். (யோவான் நற்செய்தி 13:12) மகாத்மா காந்தியடிகளின் வாழ்விலும் பல வாழ்வுதாரணங்களால் வெளிப்படுகிற காத்திரமான போதனைகள் உண்டு. அவரது ஆச்சிரமத்தில் மற்றவர்கள் தவறுகள் செய்தால் அவர்களைத் தண்டிக்க மாட்டார். மாறாக தன்னைத்தானே உண்ணா நோன்பு, மௌனவிரதம் போன்ற செயற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளால் வருத்திக்கொள்வார். இது தவறிழைத்தவர்களுக்குக் கொடுக்கக்கூடிய எல்லாவிதமான அறிவுரைகளிலும் மிகவும் பாதிப்பை ஏற்படுத்த வல்லதாயிருந்தது என்று அவரே சான்று பகர்ந்துள்ளார்.

## முடிவாக: வழிகாட்டிகள் சக பயணிகள்

வாழ்வால் உதாரணமாகி மற்ற மனிதர்களுக்கு வழிகாட்டிகளாக மாறுவதில் உள்ள உடன்பாடற்ற கருதுகோள்கள் மற்றும் அதன் அவசியத்தேவை என்பவை இங்கே சுருக்கமாக கோடிட்டுக்காட்டப்பட்டன. மனித மைய அணுகுமுறைகள் மற்ற மனிதனை நரகமாக வர்ணித்து, அற்புதமான வழிகாட்டிகளால் கூட ஐரோப்பாவில் பித்துப்பிடித்த ஒரு நாகரிகத்தையே உருவாக்க முடிந்ததாக கருத்துக்களை முன்வைத்த போதிலும், மனிதருக்கு வழிகாட்டிகள் மற்றும் வாழ்வுதாரணங்கள் அவசியமானவைகள் என்பது மறுசாராரினால் வலியுறுத்தப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. முடிவாக வழிகாட்டிகள் மற்றும் வாழ்வுதாரணங்களில் உள்ள ஓர் அபாயத்தையும் சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது.

மற்றவர்களின் வாழ்வுதாரணங்களைக் கைக்கொள்ளத் தூண்டுவது, மற்ற மனிதர்களை 'மாதிரிகளாக' (models) 'வீரர்களாக' (heros) ஏற்றி வைத்து, தமது சுய புத்தியை அவமதித்து அவர்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதில் கொண்டுபோய் விடலாம். சினிமா நட்சத்திரங்கள், விளையாட்டு வீர/வீராங்கனைகள், அரசியல் தலைவர்களை அப்படியே பின்பற்றுகின்ற அல்லது வழிபடுகின்ற (hero-worship) ஒரு கலாச்சாரமாக இது உருவெடுக்கலாம். இப்படிப்பட்ட கலாச்சாரத்திற்குட்பட்டவர்களை சொரென் கீர்க்கெகாட் (Soren Kierkegegaard) இறுக்கமற்ற அல்லது சீரற்ற இருப்புடையவர்கள் என்றழைப்பார். 'பயணம் செய்யும் மனிதன்' என்ற கருத்தின் அடிப்படையில் யாரும் மற்றவர்களுக்கு 'மாதிரியாக' அல்லது 'வீரனாக' முடியாது.

இவ்வுலகின் மனிதர்கள் எல்லோருமே ஒரு விதத்தில் பயணிகள். ஆகவே ஒரு மனிதன் மற்ற மனிதனுக்கு சகபயணியாவான். இந்த 'சகபயணி' (co-traveler) என்பதே எல்லாருக்கும் பொருந்தக்கூடிய பொதுவானதோர் உறவுமுறையாகும். இதன் மூலமாக மனிதன் என்றால் யார் என்ற வினாவுக்கு ஒரு புதிய விடை கிடைக்கிறது. 'பயணம் செய்யும் மனிதன்' (Homo viator) என்பது இருத்தலியல் சித்தாந்தத்தை சாதகமான முறையில் அணுகியவர்கள் கொணர்ந்த மனிதனுக்குரிய புதிய வரைவிலக்கணமாகும். இது 'மனிதன் ஓர் சமூக விலங்கு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்குரிய இருத்தலியல் விளக்கமாகும். 'பயணம் செய்யும் மனிதன்' பற்றி கபிரியேல் மார்ஷல் (Gabriel Marcel) விளக்குகையில் மனித இருப்பு என்ற தளநிலையில் மனிதர்கள் தனித்தவர்கள் அல்லர். ஒருவரோடு ஒருவர் கைகோர்த்துச் செல்பவர்கள் என்றார்.[8] ஆகவே ஒவ்வொரு வாழும் அல்லது வாழ்ந்த மனிதனும் தனது சகபயணியான மனிதனுக்கு செய்ய வேண்டிய அல்லது செய்யக் கூடாத செயற் பாடுகளுக்கு முன்னுதாரணமாவான். நல்ல முன்னுதாரணங்களைப் பார்த்து இப்படித்தான் வாழவேண்டும் என்று கற்றுக் கொள்வதும், மெச்சத் தகாத செயற்பாடுகளைக் கொண்டுள்ளவர்களைப் பார்த்து இப்படி வாழக்கூடாது என்று கற்றுக் கொள்வதும் சிந்திக்கத் தெரிந்த ஒவ்வொரு பயணியின் கடமையாகும்.

## அடிக்குறிப்புகள்:

1. Cfr. HANS JONAS, The Phenomenon of Life: Toward a Philosophical Biology, Northwestern University Press, Evanston, IL 2001, xxiii.
2. Cfr. GREGORY VLASTOS, '**Ethics and Physics in Democritus**', in The Philosophical Review, 54 (1945)6, 578-592.
3. Cfr. JEAN PAUL SARTRE, in the play *No Exit* (1944), quoted in Transcendence of the Ego, Williams and Kirkpatrick, 1957, p. 98.
4. பார். ந. முத்துமோகன், ஐரோப்பியத் தத்துவங்கள், காவ்யா, பெங்களூர், பக். 137.
5. Cfr. MICHEL FOUCAULT, Madness and Civilization: A History of Insanity in the Age of Reason (1964) Routledge, NY, 2009, p. xi-xv
6. "நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
   வஞ்சனை சொல்வாரடி! - கிளியே!
   வாய்ச்சொல்லில் வீரரடி."
7. Cfr. JOHN PAUL II, *Beatifying Mother Teresa*, October 2003.
8. Cfr. GABRIEL MARCEL, *Homo Viator, Introduction to the Metaphysic of Hope* (1961) Association Présence de Gabriel Marcel, Paris, 1998, p. 23.

**யோ. போல் றொகான்**
மெய்யியல் துறை,
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வால் உதாரணமாகி...

திரு. கே. பேர்னாட்

* மனிதர்கள் யாவரும் இறைவனின் படைப்புக்கள் என சகல மனிதர்களும் நம்புகின்றனர்.
* மனிதர்களின் வாழ்க்கையை வழி நடத்துபவரும் இறைவனே, இறைவனின் விருப்பத்தையே மனிதன் நிறைவேற்ற வேண்டும்.
* இறை விருப்பத்தை நிறைவு செய்யும் மனிதனே தான் படைக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவு செய்கின்றான் அப்பொழுது தான் மனிதன் தன் வாழ்வின் பயனை அடைந்து கொள்கின்றான்.
* எனவே மனிதன் இறைவனால் படைக்கப்பட்டதன் நோக்கத்தை, இறைவிருப்பத்தை சரிவர உணர்ந்து கொள்ளவும் வெளிப்படையாக அறிந்து கொள்ளவும் வேண்டும்.
* இறைவனின் மனித படைப்புக்கள் மூலமாக எதிர்பார்க்கைகள்:

1. இறைவனை சரிவர உணர்தல், அறிதல்.
2. மற்றவர்களை அன்பு செய்தல்.
3. அடுத்தவர்களுக்கு நன்மை செய்தல்.
4. அடுத்திருப்போர்க்கு தீமை, துன்பம் விளைவிக்காதிருத்தல்.
5. நேர்மையாக நடத்தல்.
6. துன்பப்படுவோர்க்கு ஊழியமும் உதவியும், ஆறுதலும் புரிதல்.
7. அடுத்தவர்களில் இறைவனைக் காணுதல்.
8. உண்மையாக வாழுதல்.
9. வெளிப்படையாக வாழுதல்.
10. விட்டுக் கொடுத்தல

இவை எல்லாவற்றுக்கும் ஒரே வழி வாழ்வால் உதாராணமாகி நிற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது எவ்வாறு?

இறைவார்த்தைகளை வாழ்வாக்க முயற்சித்தல்.

1. சமூகத்தில் "உப்பாக" இருத்தல் - (மத்தேயு 5:13)
2. தீர்ப்பிடாதிருத்தல் - (மத்தேயு 7:1-4)
3. பெரியவர்களை அல்லது அயலவர்களை அல்லது அனைவரையும் சமமாக மதித்தல்.
4. இன்சொல் பேசி நண்பர்களை அதிகரித்தல் - (சீராக் 6:5)
5. கோபத்தை கட்டுப்படுத்தல் அல்லது பின்போடுதல்.
6. நாவடக்கமாக இருத்தல், வீண் வார்த்தைகளை பேசாதிருத்தல் - (நீதிமொழிகள் 18:21)
7. இறந்த பின்பும் வாழ்வற்கு முயற்சி செய்தல். (வாழ்க்கையால் வாழ்வைப் பதிவு செய்)
8. கடவுளைப் பார்த்து தலையசைத்தால் மட்டும் போதாது, கடவுள் காட்டும் வழியில் நடக்க வேண்டும்.
9. மன்னித்து மறக்கப் பழகுங்கள், விட்டுக் கொடுங்கள்.
10. கவலைப்படாதீர்கள் நல்லவை நடக்கும், கவலைகள் உன்னில் வாழலாம் ஆனால் நீ கவலைக்குள் வாழாதே.
11. நம்பிக்கையுடன் வாழுங்கள்.
12. எல்லோராலும் விரும்பப்படுவர்களாக வாழ முயற்சி செய்யுங்கள்.
13. கடவுளால் உங்களுக்கு வழங்கப்பட்ட ஆற்றல்கள் திறன்களை இனங்கண்டு பயன்படுத்த முயற்சி செய்யுங்கள்.
14. பகிர்ந்து வாழுங்கள்.
15. உன்னைப்பற்றி யாராவது குறை சொன்னால் குறைகூறும் அளவிற்கு நீ நடந்து கொண்டதாக வருத்தப்படு.
16. மற்றவர்களுக்கு உதாரணமாக முன்மாதிரியாக வாழ முயற்சி செய்.

திரு. கே. பேர்னாட்
பீடாதிபதி
வ/தேசிய கல்வியியற் கல்லூரி,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள்பணி நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி.

- சில குறிப்புகள் -

அருள்சகோ. டிலிசியா

அருள்தந்தை,தந்தை ஞானப்பிரகாசர் ஒரு தலைசிறந்த கல்விமான் இவர் 1875 ஆம் ஆண்டு, ஆவணித் திங்கள் 30 ஆம் நாள் இராஜசிங்கம் சுவாமிநாதப்பிள்ளை - தங்கமுத்து தம்பதிகளின் தவப் புதல்வராக யாழ்ப்பாணம், மானிப்பாயில் பிறந்தார். அவர்கள் இருவரும் இந்துக்கள். ஆரம்பத்தில் இவர் வைத்திலிங்கம் என அழைக்கப்பட்டார். சிறு வயதிலேயே தந்தையை இழந்தார். அதன்பின் அவருடைய தாயார், யாழ். அச்சுவேலியைச் சேர்ந்த தம்பிமுத்துப்பிள்ளை என்ற கத்தோலிக்கரை மணந்தார். அதற்குப் பின்னர் வைத்திலிங்கம் கத்தோலிக்க மறையில் சேர்ந்து 'ஞானப்பிரகாசம்' என்ற பெயரைப் பெற்றார். தனது கல்வியை முதலில் மானிப்பாயிலிருந்த இந்து ஆங்கில பாடசாலையிலும், பின்னர் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் மேற்கொண்டார். தன் பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டதும், இலங்கைப் புகையிரதத் திணைக் களத்தில் அரச அலுவலராகப் பணிபுரிந்தார். இக்காலகட்டத்தில் யாழ் நகரில் பணிபுரிந்துவந்த அருட்தந்தை சாள்ஸ் கொலின் என்பவரைச் சந்தித்ததன் வழியாக தம் அரச அலுவலகர் பணியைத் துறந்து 1896 இல் அமலமரித் தியாகிகள் சபையில் அங்கத்தவராகச் சேர்ந்து கொண் டார். தன் குருத்துவப் படிப்புகளை மேற்கொண்டு 1901 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் முதலாம் நாள் அமலமரித் தியாகிகள் சபைக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1902 இல் ஊர்காவற்றுறையில் அருள்தந்தை டோறற்றின் வழிகாட்டலின் கீழ் தன் குருத்துவப் பணியை ஆரம்பித்தார். அங்கு அவர், ஒரு கத்தோலிக்க இரவல் கொடுக்கும் நூல்நிலையத்தை ஆரம் பித்தார். அடுத்த ஆண்டில், யாழ். மேற்றிராசனக் கோயிலுக்கு உதவிப் பங்குத்தந்தையாகச் சென்றார். 1905 ஆம் ஆண்டு யாழ் நகரிலே நல்லூர் என்னும் இடத்திற்குப் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். அங்கும் நூல்நிலையம் ஒன்றை ஆரம்பித்தார். அத்துடன் அப்போஸ்தலிக்க ஆர்வத்துடன் பணிபுரிந்து விரைவில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட இந்து மக்களை கத்தோலிக்க மறையில் சேர்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்தந்தை ஞானப்பிரகாசர் தலைசிறந்த கல்விமான் மட்டுமல்ல, வடமொழியிலும், இந்து மொழியிலும் நன்கு அறிவுள்ளவராக இருந்தார். யாழ்ப்பாண வரலாற்றுக் கல்வியை மிக விருப்போடு கற்றார். இவர், தமிழ்மொழியை, கடவுள் தனக்குத்தந்த மொழியென ஏற்று, மிகவும் நேசித்தார். எனவே, தமிழ்மொழி பற்றி பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, தமிழ்மொழி ஒரு பழமை வாய்ந்த மொழி. இதுவே ஆரம்பத்தில் பேசப்பட்டுவந்த மொழி. இதிலிருந்து ஏனைய சகோதர மொழிகள் பல பிறந்துள்ளன என நிரூபிக்கலானார்.

இப்படியாக இவர் இந்து, ஐரோப்பிய மொழிகள் எல்லாம் தமிழ்த்தாயின் பிள்ளைகள் என்ற கருத்தையும் கொண்டிருந்தார். வரலாறு பற்றியும் ஆர்வம்கொண்டு, பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். பழமை வாய்ந்த கையேடுகள், சில்லறைக் காசுகள் போன்றவற்றைத் தொகை யாகச் சேகரித்து, தமிழ்மொழியின் தொன்மையை நன்கு ஆய்வுசெய்து அதனை உலகிற்குப் பரப்பினார். சிங்கள, ஆங்கில மொழிகளில் பல நூல்களை எழுதினார். இவர் எழுதிய தமிழ் நூல்களில் சில வருமாறு:

1. யாழ்ப்பாண வைபவமாலை ஊற்றுக்கள்
2. யாழ் அரசனின் மறந்த காசுகள்
3. போர்த்துக்கேய கால அரசர்கள்
4. யாழ்ப்பாண வைபவ விமோசனம் / தமிழரும் இலங்கையும்
5. தமிழ் பண்பாடு
6. 25 ஆண்டுகள் கத்தோலிக்கத்தின் வளர்ச்சி.

இவற்றைவிட பல தமிழ் அகராதிகளை எழுதிய இவர் பன்மொழிப் புலவர் எனவும் அழைக்கப்பட்டார். 22.01.1947 இல் இறைபதம் அடைந்தார்.

**அருள்சகோதரி டிலிசியா**
2 ஆம் வருடம், கிறிஸ்தவத் துறை,
யா.தே.க.க.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆய்வரங்கப் பாடல்கள்

## 1. என்னை வழிநடத்தும் தூய ஆவியே

என்னை வழிநடத்தும் தூய ஆவியே
என்னில் வல்லமை பொழிந்திடுமே
யோர்தான் நதியில் எழுந்தவரே
வல்லமை பொழிந்திடுமே

அஞ்சிய சீடர்கள் நடுவினிலே
நெருப்பாய் இறங்கினீரே
அஞ்சிடும் மாந்தர் எம்நடுவில்
நெருப்பாய் இறங்கிடுமே

பவுலையும் சீலாவையும் சிறையினின்று
விடுவித்து நடத்திச் சென்றீர்
சிறையில் வாடும் எம்மவரின்
விலங்குகள் உடைத்திடுமே

## 2. கடல் கடந்து சென்றாலும்

கடல் கடந்து சென்றாலும் - தீ
நடுவே நடந்தாலும் - புயல்
சூழ்ந்து எழுந்திடும் காரிருளை - நீ
கடந்திட நேர்ந்தாலும்
உன்னோடு நான் இருப்பேன் - 2
அஞ்சாதே கலங்காதே

தேவனின் பார்வையில் நீ மதிப்புள்ளவன்
பொன் விளை நிலம் போலே
பூமியில் வாழ்ந்திடும் யாவிலும் உன்நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தது அவராலே
பால் நினைந்தூட்டிடும் தாய் மறந்தாலும்
நீ அவர் மடிமேலே - மனம்
தேற்றுவார் பலம் ஊட்டுவார்
வாழ்வினில் ஒளிதானே - அஞ்சாதே

பாலையில் பாதையும் பாழ்வெளி ஓடையும்
தோன்றிடும் அவர் கையால்
வான்படை ஆண்டவர் வாய்மொழியால் வரும்
மேன்மையை எவர் சொல்வார்
பார்வையிழந்தவர் வாய்திறவாதோர்
யாவரும் நலமடைவர் - இறை
மாட்சியில் அவர் ஆட்சியில்
மானிடம் ஒன்றாகும் - அஞ்சாதே

## 3. நிலையான சொந்தம்

நிலையான சொந்தம் நீதானே என்றும்
நீ போதும் என் இயேசுவே
அயராது என்றும் அணைக்கின்ற செல்வம்
நீ போதும் என் இயேசுவே
கொடியாக நீயும் கிளையாக நானும்
பிரியாத வரம் வேண்டுமே
கடலான நீயும் நதியான நானும்
இணைசேர அருள் வேண்டுமே
உனைக்காண என்விழிகள் ஒளி தேடுதே
உனையன்றி என்வாழ்வு குமிழ் போன்றதே

உடையாத உறவாய் கலையாத கனவாய்
நீ போதும் என் இயேசுவே
மறையாத உன் அன்பு மடியாது எந்நாளும்
நீ போதும் என் இயேசுவே
சுமைகளால் நான் சோர்ந்திருந்தேன்
சுகமாய் வந்து நீ சேர்ந்தாய்
என் வாழ்வில் நீ என்றும் நிலையான சொந்தமே

அணையாத அருளாய் அழியாத விருந்தாய்
நீ போதும் என் இயேசுவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகாத உயிராய் நலம் சேர்க்கும் மருந்தாய்
நீ போதும் என் இயேசுவே
வறுமையால் நான் வாடி நின்றேன்
வசந்தமாய் வந்து நீ சேர்ந்தாய்
என் வாழ்வில் நீ என்றும் நிலையான சொந்தமே

## 4. மாறாதது மாறாதது

மாறாதது மாறாதது மாறாத உன் பாசமே
மறையாதது மறையாதது மறையாத உன் நேசமே
நிலையானது நிஜமானது
நெஞ்சத்தில் நீங்காதது - என்
நினைவெல்லாம் நிழலாடுது

என் அன்னையின் கருவில்
என்னைநீர் என்னைநீர் தெரிந்தெடுத்தாய்
உன் கண்ணின் கருவிழிபோல்
கருத்தாய் கருத்தாய் காத்து வந்தாய்
என்னை அள்ளி எடுத்து
அணைத்துக் கொண்டாய்
உன் தோளில் சுமந்து நடந்து வந்தாய்
வாழ்வு முழுவதுமே இனிக்கச் செய்தாய்
வானின் மழையெனவே
நின் அருளைப் பொழிந்தாய்
உன்பாசம் மாறாதது
உன் நேசம் அழியாதது

என் உறவென்னை வெறுக்க
உறவாய் உறவாய் நீ வந்தாய்
நான் உன்னோடு இருப்பேன்
என்று நீ மட்டுமே உறுதி தந்தாய்
என்பயணம் முழுவதுமே தொடர்ந்து வந்தாய்
என் களைப்புப் போக்கவும்
உன் மடியைத் தந்தாய்
துன்பம் இல்லா வாழ்வைத் தந்தாய்
இன்பம் காணும் உலகம் தந்தாய்
உன் பாசம் மாறாதது
உன் நேசம் அழியாதது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. தொடும் என் கண்களையே

தொடும் என் கண்களையே
உம்மை நான் காண வேண்டுமே
இயேசுவே உம்மை நான்
காணவேண்டுமே

தொடும் என் காதுகளை
உம்குரல் கேட்க வேண்டுமே
இயேசுவே உம்குரல்க்
கேட்க வேண்டுமே

தொடும் என் ஆண்டவரே
தொடும் எம் வாழ்வினையே
இயேசுவே உம்மைப் போல்
என்னை மாற்றும்

தொடும் என் மனத்தினையே
மனப்புண்கள் ஆற வேண்டுமே
இயேசுவே மனப்புண்கள்
ஆற வேண்டுமே

தொடும் என் உடலினையே
உடல் நோய்கள் தீர வேண்டுமே
இயேசுவே உடல் நோய்கள்
தீர வேண்டுமே

(தொடும்...)

தொடும் என் ஆன்மாவையே
என் பாவம் போக்க வேண்டுமே
இயேசுவே என் பாவம் போக்க வேண்டுமே

தொடும் என் இதயத்தையே
உம் அன்பு பெருக வேண்டுமே
இயேசுவே உம் அன்பு
பெருக வேண்டுமே

(தொடும்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. என் சுவாசக்காற்றே

என் சுவாசக்காற்றே என் வாழ்வின் ஊற்றே
இறைவா என் உள்ளம் வருவாய்-என்
உயிரின் உறவே என் வாழ்வின் வழியே
தலைவா நீ உன்னைத் தருவாய்
என் வாழ்வும் என்வளமும்
எல்லாமும் நீதானே
இறைவா தலைவா- உன்
அன்பினைப் பொழிவாய்

என் சொந்தம் யாவும் என் தேவை
யாவும் நீதானே நீதானே இறைவா
என் நெஞ்சில் நேசம் மாறாத பாசம்
தருவாயே தருவாயே தலைவா
வாழ்நாளெல்லாம் நீ வேண்டுமே
வாழ்வாய் வழியாய் நிறைந்திட வருவாய்.

(என் சுவாச...)

எழில் வானம் போல நிலைக்கும் உன் அன்பை
அறிவேனே அறிவேனே இறைவா
உனைப்போல் நானும் பிறர் அன்பில் வளர
அருள்வாயே அருள்வாயே தலைவா
மகிழ்ந்திட நாளும் அருள் வேண்டுமே
ஒளிர்ந்திட நாளும் துணை வேண்டுமே
நிழலாய் நினைவாய் வாழ்வினில் வருவாய்

(என் சுவாச...)

*ஞானமுள்ளவர்களின் சொற்கள் ஆயரின்
சொல்போல் வழி நடத்தும்.
தொகுத்துவைத்த முதுமொழிகள் பசுமரத்தாணி
போல் உள்ளத்தில் பதியும்.
அவை ஒரே ஆயரால் அளிக்கப்பட்டவை.
மிகுதியான படிப்பு உடலுக்கு இளைப்பு.
(ச. உ. 12:11-12*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ ஆய்வரங்கு - 2011

## "வாழ்வால் உதாரணமாகி..."

### நிறைவில்...

**நாம் நன்றியுடன் நினைப்பவர்கள்:**

- **ஆலோசனை கூறி ஆக்கம் படைத்தோர்,**
  - அனுமதிதந்து ஆரோக்கியமாய் வழிநடத்திய எங்கள் பீடாதிபதி திரு. எஸ். கே. யோகநாதன் அவர்கள்,
  - தொடக்கம் முதல் இறுதிவரை தோளோடு தோள்கொடுத்து உழைத்த எமது கல்லூரியின் வருகைதரு விரிவுரையாளர் அருள் பணி பி. ஜெயந்தன் (அ.ம.தி) அவர்கள்
  - மூலகாரணமாய் முதல்மொழி சொல்லிய மனித முன்னேற்ற நடுநிலைய நிர்வாக உத்தியோகத்தர் திரு. இ. அன்ரன் திலக ரட்ணம் அவர்கள்.

- **நிதி தர நேசக்கரம் நீட்டியோர்,**
  - அருள்பணி சே. பேணாட் றெக்னோ அடிகளார், இயக்குநர், கியூடெக் - கரித்தாஸ்.
  - அருள்பணி பிரவீன் மகேசன் அடிகளார், இயக்குநர், சமாதானத் திற்கும் நல்லிணக்கத்துக்குமான மையம் (CPR).
  - திரு. யே. யூட் வோல்ரர், திட்டமிடல் பணிப்பாளர், ZOA.

- **கனதியாய் கருப்பொருளை வெளிக்கொணர்ந்த பெரியோர்கள்,**
  - உயர்திரு கே. பேர்னாட் - பீடாதிபதி, வவுனியா தே.க.க.,
  - அருள் கலாநிதி போல் றொகான் - புனித சவேரியார் குருமடம், யாழ்ப்பாணம்.

- **அரங்கை மெருகேற்ற அர்ப்பணிப்புடன் உழைத்தவர்கள்,**
  - அருள்பணி ப. சத்தியசீலன் அ.ம.தி
  - கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம், யாழ் மறை மாவட்டம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

⊙ திரு. தினேஸ் அவர்கள்.

❖ உழைப்பினில் எங்கள் உடனிருந்தோர்,


❖ ஆசிகள் வழங்கிய அன்பு உள்ளங்கள்,

❖ வாழ்க்கைப் பதிவைக் கருத்துரையாய்த் தந்தவர்கள்.

**அனைவர்க்கும் எது நன்றிகள்**

"தினைத்துணை நன்றி செயினும்
பனைத்துணையாகக் கொள்வர் பயன் தெரிவோர்."

கிறிஸ்தவ மன்றம்
யா.தே.க.க.



ஜெயந்த் சென்ரர், மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

dation.
org



"ஆகவே, ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளை கழுவினேன் என்றால், நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளை கழுவ கடமைப்பட்டிருக்கிறீர்கள்." – யோவான்

ஜெயந்த் செனரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org